முருகப்பெருமான் துணை

**மகான் மாலாங்கன் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.04.2024,** வியாழக்கிழமை

1. அறிவு ஞானத் தெளிவுதனை
அனைவருக்கும் வரமாகத்தரும்
ஆறுமுக அரங்கமகா ஞானியே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சேல் திங்கள்
குறைவிலா இருபானீர்திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 22 ம் நாள், 04.04.2024, வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
தேசிகன் கேட்க மாலாங்கன் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான நிலைகள் அடைய
ஞான வழிகாட்டும் அரங்கனும்
ஞானபண்டிதனின் அம்சமே ஆகும்
4. ஆகவே உலகோர் அனுகி வந்து
ஆற்றல்மிகு அரங்கனிடத்தில்
வகையான உபதேசம் ஏற்று
வணங்கி சீடர்களாகி இணைய
5. இணையவே அளவிலாத வண்ணம்
என்றும் அரங்கமகா ஞானியரின்
துணைபலம் பெருகி நின்று
தொண்டர்களாக சேவை வகையில்
6. வகையில் நல் ஆற்றல் ஞான ஆற்றல்
வடிவேலனை தரிசிக்கும் ஆற்றல்
வகைபட கண்டடைந்து நன்கு
வருமுலகில் தரும சேவையும் வளர்க்க
7. வளர்க்கவே தருமவான்களாக
வையகத்தை வளமாக்கும் வண்ணம்
தளர்விலா சேவைகள் ஆற்றி
தரணியோர் ஞானிகள் வரமருள

8. வரமருள தன்னிலை தேறி
வல்லமை பொருந்திய ஞானிகளாக
சரவணப் பெருமான் வழிகாட்டிட
சர்வபலமும் பொருந்தி நிற்பர்

9. நிற்கவே நிலவுலக அரசியலை
நீதி நிர்வாக ஆளுமைகளையும்
அற்புதமாய் மாற்றும் சக்திகளாக
அதிகாரிகளாக ஆளுமை சக்திகளாக

10. ஆகவே உருவெடுத்து உலகினில்
அதிசயம் பல படைப்பர்
மகான் அரங்கன் அவதார
மகிமையாவும் விளங்கி இனிதே

11. இனிதே உலகமாற்றம் புரிவர்
எங்கும் ஞானவான்கள் நிரம்ப
கனிவேலவன் தலைமை படைப்பர்
கண்டுரைத்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—